[2nd August 1966

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், போடிநாயக்கனூரிலிருந்து தேவாரம் வரை 12 மைல் சாலை வருகிறது. அது பஸ் போக்குவரத்து இருக்கக் கூடிய சாலை. ஆடி மாதத்தில் காற்றினால் சாலை மணலால் மூடப்பட்டு வருகிறது. அங்கே மணலை அகற்ற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறதா? இல்லை என்றால் அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : காற்றினால் ஹைவேசில் மண் விழுந்தால் அதை அப்புறப்படுத்தத் தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : சார், இந்த இடமானது மிகவும் கஷ்டத்திற்குள்ளாகி இருப்பதால், இதை எவ்வளவு சீக்கிரத்தில் நிறைவேற்ற முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : வேலை நடந்துகொண்டுதான் வருகிறது. எவ்வளவு தூரம் கட்டுப்படுத்த முடியுமோ அதற்கு அதிகமாகச் செடிகளை வைத்துக் காற்றின் வேகத்தைத் தடுத்தால்தான் முடியும்.

தீயணைப்புத்துறைத் தொழிற்கூடம், சென்னை

* 28 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத் தலைநகரில் இருக்கின்ற தீயணைக்கும் படையினரால் வைத்து இயங்கிவருகின்ற தொழிற்கூடத்தை (ஒர்க்ஷாப்பை) கலைத்துவிட்டு நமது மாநில சர்க்கார் வைத்து நடத்தும் ட்ரான்ஸ்போர்ட்டு ஒர்க்ஷாப்பில் சேர்த்துக்கொள்வதற்கு செயற்குறிப்புகள் ஏதேனும் உள்ளனவா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் நடத்தப்படுகிற டிரான்ஸ்போர்ட் ஒர்க்ஷாப் ஒன்று இருக்கும்போது எதற்காக இது தனியாக இருக்கவேண்டும்? டிரான்ஸ்போர்ட் ஒர்க்ஷாப் இல்லாதபோது எம். எஃப். எஸ். ஒர்க்ஷாப் தவிர்க்க முடியாத ஒன்று; இப்போது அது தேவையில்லாத ஒன்று. அரசாங்க டிரான்ஸ்போர்ட் ஒர்க்ஷாப்பில் உள்ள தொழிலாளர்களுக்கு எல்லாச் சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன; எம். எஃப். எஸ். ஒர்க்ஷாப்பில் சலுகைகள் கொடுக்கப்படவில்லை. இந்த ஒர்க்ஷாப்பை டிரான்ஸ்போர்ட் ஒர்க்ஷாப்போடு சேர்த்துவிடலாம் என்று தான் கருதுகிறேன்; அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்கள்?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் கருதுவதாலேயே ஒர்க்ஷாப்பை இணைக்க முடியாது. அவசரத்திற்கு அவ்வப்போது ரிப்பேர் செய்வதற்கு இந்த ஒர்க்ஷாப் தேவைப்படுகிறது என்ற காரணத்தினால் இது இணைக்கப்படவில்லை.

2nd August 1966]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அந்த ஓர்க் ஷாப்பில் வேலை செய்யும் தொழிலாளர்கள் குறைந்த அளவில்தான் இருக்கிறார்கள். அங்கு செய்யப்படும் வேலையும் குறைவாகத்தான் இருக்கிறது. அந்த வேலைகளை டிரான்ஸ்போர்ட் ஓர்க்ஷாப்பில் செய்து கொள்ளலாம். அதனால் கஷ்டமும் இருக்காது, நஷ்டமும் இருக்காது. இதைப்பற்றி மறுபரிசிலனையாவது செய்து அதைச் சேர்ப்பதற்கு வழிவகை செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதில் மறு பரிசிலனை செய்வதற்கு ஒன்றும் இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, மறு பரிசிலனை செய்வதற்கு இட மில்லை என்று சொல்லியது ஓரளவு உண்மை யாகக் கூட இருக்கலாம் ; இருந்தாலும் அம்மாதிரி சேர்ப்பதால் செலவு குறையலாம் அல்லவா ? சிக்கனம், சிக்கனம் என்று சொல்லக் கூடிய அமைச்சர்களுக்கும் இது நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏன் அப்படிச் செய்யக் கூடாது ?

கனம் திரு. பூ. கக்கன் : தீயணைப்புப் படையைச் சேர்ந்த மோட்டார் என்ஜின்ஸ் வெகு சிக்கிரத்தில் ரிப்பேர் செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படவேண்டும். அதை விட்டு டிரான்ஸ் போர்ட் ஓர்க்ஷாப்புக்குப் போனால் அவர்கள் வேறு வேலை இருக் கிறது என்று உடனடியாகச் செய்ய முடியாமல் போகலாம். அப் போது அந்தப் பகுதியில் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால் கஷ்டம் ஏற்படும் என்ற காரணத்தினால் தான் தனியாக வைக்கவேண்டு மென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

***29 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள தீயணைக்கும் படை தொழில்கூடத்தை 9-12-1965-ல் இரண்டாவது வட்ட தொழிற்சாலை ஆய்வாளர் பார்வையிட்டாரா ?

(இ) ஆமெனில், அது குறித்து I. G. அவர்களுக்கு புகார் ஏதேனும் செய்திருக்கிறாரா ?

(உ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) சென்னையிலுள்ள தீயணைக்கும் படை தொழில் கூடத்தை 9-12-1965-ல் மூன்றாவது வட்ட தொழிற் சாலை ஆய்வாளர் பார்வையிட்டார்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்வி எழவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தொழிற் சாலையைப் பார்வையிட்ட அதிகாரி அங்கே வைக்கப்பட்டுள்ள புகார்ப் புத்தகத்தில் எதையும் எழுதாமல் போயிருப்பாரானால்,